என்பது என்ன என்று வரையறுத்து வைத்திருக்கிறார்கள் என்று அறிகிறேன். இன்ன மருந்து கொடு, அல்லது இன்ன ஊசி போடு என்று எழுதித் தருகிறார்களே அது கன்ஸல்டேஷன். இந்த ஊசியை இன்னொரு டாக்டர் வேறொரு இடத்தில் போடுவது ப்ராக்டிஸ் ஆகும். டாக்டர் இரத்தினவேலு சுப்பிரமணியம் அவர்களிடம் ஒருவர் கன்ஸல்டேஷன் செய்துகொண்டார் என்று சொன்னால், டாக்டர் இரத்தினவேலு சுப்பிரமணியம் அவர்கள் மருந்து எழுதிக் கொடுத்துவிடுவார்கள். அந்த மருந்தை வாங்கி வேறொரு இடத்திலுள்ள டாக்டரிடம் கொண்டுபோய் போட்டுக் கொள்ளவேண்டும். இதுதான் அவர்கள் கையாண்ட முறை. இதை மாற்றுவதென்றால், அகில இந்திய அடிப்படையில்தான் ஒரு எண்ண ஓட்டம் ஏற்பட்டு மாற்ற வேண்டும்.

Treatment for Tuberculosis

* 839 *Q.*—THIRU N. K. PALANISWAMY: Will the Hon. the Minister for Health be pleased to state—

(*a*) whether there is any proposal under the consideration of Government to prepare a scheme for a shorter period of treatment for T.B. patients in the State; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: (அ) இல்லை.

(இ) இக்கேள்வி எழவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்த கேள்விக்கும் விடை சொல்லிவிடலாம்.

* 840 வினா—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் நடமாடும் காசநோய் மருத்துவ மனைகள் உள்ளனவா?

(இ) ஆம் எனில், எத்தனை, எங்கெங்கு இயங்கி வருகின்றன?